நிர்வாகத்தை வைத்துக் கொண்டு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று அவர்களை பின் தொடர்ந்து செல்வது சிரமமான காரியாமக இருக்கிறது. இப்போது ஒரு புதிய கட்டுப்பாட்டைக் கொண்டு வர வேண்டும் என்று கருதுகிறோம். மனை கொடுத்த குறிப்பிட்ட காலத்திற்குள் பணியைத் துவக்காமல் இருந்தால் அதைக் கான்சல் செய்வது நல்லது என்று கருதுகிறோம். யாருக்கு அவசியம் இருக்கிறதோ அவர்களுக்கு ஒதுக்குவது நியாயமாக இருக்கும் என்று கருதுகிறோம். எனவே இந்த அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்படும்.

குடியிருப்புகளைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கான விவரம் என்னிடத்திலே இல்லை. ஏற்கெனவே சட்டமன்றத்திலே தெரிவிக்கப்பட்டிருக்குமேயானால் அதற்கேற்ப முறையான நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கும்.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர், கிண்டி மற்றும் உள்ள தொழிற் கூடங்களை விற்கும் போது என்ன விலையில் விற்கப்படுகிறது ? மார்க்கெட் ரேட்டிலா அல்லது வேறு விலையிலா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்கப்படுகிற விலையில் குறிப்புகள் இப்போது என்னிடத்திலே இல்லை. ஏற்கெனவே ஆரம்பக் காலத்திலே ஒரு முறையைக் கடைப்பிடித்து, அதாவது சீட்டு குலுக்கி அல்லது வேறு வழியிலேயோ செய்திருக்கக் கூடும். இப்போது சில இடங்களில் காலியாகும் போது அரசாங்கத்திடம் மனு போட்டு அவர்கள் பெறுகிறார்கள். சமீபத்திலே ஒரு கூடத்தைக் கொடுத்தது எனக்கு நினைவு இருக்கிறது. அரசாங்கத்திலேயே ஒரு முடிவு எடுத்து என்ன தொகை ஆகியிருக்கிறதோ அந்தக் காஸ்ட்டுக்கே கொடுக்கும் நிலையை எடுத்திருக்கிறார்கள். தொழில் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காக சில நஷ்டங்களை ஏற்றுக் கொண்டு இப்படிப்பட்ட நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

காவேரிப்பட்டினம் — காக்கங்கை ரோட்டில் ஆற்றின் குறுக்கே பாலம்.

618—(*வினா எண். 12848) திரு. டி. எம். வெங்கடாசலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் — காக்கங்கை ரோட்டில் நடுப்பட்டி மாடஹள்ளி அருகில் உள்ள ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

1987 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பாலப் பணிகளும் ''பணித் தொகுப்பு பட்டியலில்'' சேர்க்கப் பட்டுள்ளன. அரசின் நிதி நிலைமைக்கேற்ப எதிர் வரும் ஆண்டுகளில் பாகம் 2 திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய பரி சீலிக்கப்படும்.

திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பட்டியலில் சேர்த்திருந்தாலும், இந்த ஆண்டிலேயே எடுத்து, செயல் படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு பாலத்திற்கு 30 இலட்சம் ரூபாயும், இன்னொரு பாலத்திற்கு 10 இலட்சம் ரூபாயும், ஆக மொத்தம் 40 இலட்சம் ரூபாயாகிறது. எனவே இந்த ஆண்டு பட்டியலில் சேர்க்க வாய்ப்பில்லை. ஏற்கெனவே அந்தப் பட்டியல் அமைக் கப்பட்டு விட்டதால், இவ்வளவு தொகையை எடுத்து, செலவு செய்ய வாய்ப்பில்லை. வருங்காலத்தில் இது பற்றி பரி சீலிக்கலாம்.

திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பார்ட் 2 ஸ்கீம் பட்டியல் பற்றி இன்னும் முடிவெடுக்கப்படவில்லை என்றும், என்னுடைய தொகுதியிலே உள்ள குன்னத்தூர் பாலத்தை முதன்மையாக வைத்திருக்கி றோம் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. அதற்கு 35 இலட்சம் ரூபாய் கேட்டு, முன்னு ரிமை கொடுத்து வைத்திருக்கிறார்கள். அதை இந்த ஆண்டே பட்டியலில் சேர்த்துக் கொள்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது அந்தக் குறிப்பு இங்கே இல்லை. உங்களுக்குக் கடிதம் வந்திருந்தால், அதன் அடிப்படையிலே, நிதி நிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ்சாலை, அதைப் போல நம்முடைய அரசுக்குச் சொந்தமான நெடுஞ் சாலைத் துறை ஆகியவற்றில் கட்டப்படுகின்ற பெரும்பான்மை யான பாலங்கள் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் முடிக்கப் படாததால் வாகனங்கள் போக்குவரத்திற்குத் தடையாக இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? காண்ட்ராக்டர்கள் ஒரு பாலத்தை கட்டி முடிப்பதற்குக் கால தாமதமாகச் செய்தால் மன்னிக்கலாம். 2 பாலங்களைத் தாமதம் செய்யும்போது, அவர்கள் பெயர்களை லிஸ்டில் வைத்திருக்கலாமா ? இது குறித்து அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியதுபோல எல்லாப் பாலங்களிலும் காலதாமதம் ஏற்படுவதில்லை. சிலர் அதிகமான பணிகளை ஏற்றுக் கொண்டு விடுவதால், சில பணி களில் கால தாமதம் ஏற்படுகிறது. அவர்களுக்கு நோட்டீஸ் எல்லாம் கொடுக்கப்படுகிறது. அவர்களை வெளியே அனுப்ப வேண்டுமென்று அரசு முடிவெடுத்தால், கான்ட்ராக்டர்கள் கிடைக்காமல், அதிகமான சலுகைகளை அளித்து, 10 இலட்சம் ரூபாய் வேலையை, 15 இலட்சம் ரூபாய்க்கு போட்டியில்லாமல் விடக் கூடிய நிலைமை ஏற்படும். கால தாமதம் இல்லாமல் அவர்கள் செய்ய பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக் கிறது.

திருச்சி, புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் முசுக்கொட்டை செடி வளர்ப்பு.

619—(*வினா எண். 13127) திரு. எஸ். இராசாராமன் திரு. ஜே. முகம்மதுகனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய மாவட் டங்களில் தலா 200 ஏக்கர் நிலத்தில் முசுக்கொட்டைச் செடி வளர்ப்பதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 1986—87ஆம் ஆண்டில் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் முறையே, 250, 150, 200 ஏக்கர் நிலத்தில் புதிதாக முசுக் கொட்டைச் செடி பயிரிட திட்டமிடப்பட்டு தற்போது திருச்சி மாவட்டத்தில் 250 ஏக்கர் நிலத்திலும், புதுக்கோட்டை மாவட் டத்தில் 152 ஏக்கர் நிலத்திலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 210 ஏக்கர் நிலத்திலும் புதிதாக முசுக்கொட்டை செடி பயிரிடப் பட்டுள்ளது.

திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், அறிவிக்கும்போது திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்களில் செயற் படுத்த இருப்பதாகச் சொன்னார்கள். எந்தெந்த ஊர்களிலே இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட இருக்கின்றன என் பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?